28th January 1972]

Pangolin Animal

* 50 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any giant pangolin animal has been captured in Banavaram Forest near Arni about the 12th December 1970; and

(*b*) whether any steps have been taken to protect this breed ?

எறும்புதின்னி பெரும் விலங்கு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970 டிசம்பர் 12-ஆம் நாள் அளவில் ஆரணிக்கு அருகில் பாணாவாரம் காட்டில் எறும்புதின்னி பெரும் விலங்கு ஏதாவது பிடிக்கப் பட்டதா ?

(இ) இந்த இனத்தைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) தமிழ் நாட்டில் இந்த வனவிலங்கு இனத்திற்கு தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்காக அரசின் பரிசீலனையில் உள்ள வன விலங்குகள், வனப் பறவைகள் பாதுகாப்பு மசோதாவில், வகை செய்ய உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : இந்த விலங்கினம் பிடிக்கப்பட்டு எங்கே வைக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : கிண்டி பூங்காவிலே தனியாகக் கூண்டு அமைத்து ஓராண்டுக் காலமாக வைக்கப்பட்டிருக்கிறது.

Separate road for Harifans

* 39 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether a separate road has been laid for Harijans in Sevalapuri village of Gingee taluk in South Arcot district; and

(*b*) if so, the details thereof ?

அரிசனங்களுக்குத் தனி சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தென் ஆற்காடு மாவட்டம், செஞ்சி தாலுக்கா, செவலபுரி கிராமத்தில் அரிசனங்களுக்கெனத் தனியாகச் சாலை போடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?